Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

இப்பொழுது தியானித்துக்கொண்டிருப்பது . .

**கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பது எப்படி?**

வேத ஆராய்ச்சி பாடங்கள்



வாரந்தோறும் – திங்கள் கிழமைகளில்
மாலை - 6.30 மணி முதல் 8.00 மணி வரை
இடம்: ஏ-4, டேஜூ ப்ளாஸா, 2, தெற்கு அவென்யூ,
ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.
( சைதாப்பேட்டை கோர்ட் அருகில் )
( பாரத ஸ்டேட் பாங்க் மற்றும் ஐஸிஐஸிஐ பாங்க்கின் மாடி )

வேதத்தின் ஆழங்களைப் படித்து தெரிந்துகொள்ளவேண்டும் என்று வாஞ்சிப்பவர்கள் இதில் கலந்துகொள்ளலாம்

உன் தேவனாகிய கர்த்தரிடத்தில்
உன் முழு இருதயத்தோடும்,
உன் முழு ஆத்துமாவோடும்,
உன் முழு மனதோடும்,
உன் முழுப் பலத்தோடும்
அன்புகூருவாயாக
என்பதே பிரதான கற்பனை..

Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

VOL . 4 ISSUE . 8 தனிப்பிரதி ரூ 20/= மார்ச் 2011

# ஜெப எக்காளம்



## தேவனிடத்தில் அன்புகூரு..



# அன்புகூருவேன் ..

## – நிஜா கென்னடி

**உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூருவாயாக என்பதே பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே** (மாற்கு 12:30,31). நாம் கர்த்தரை நேசிக்க வேண்டும்.நம்மை உண்டாக்கின நம் தேவனாகிய கர்த்தரிடத் தில் முழுமையாக அன்பு செலுத்த வேண்டும் என்று கர்த்தர் வாஞ்சிக்கி றார்.நம்மை நாம் எந்த அளவு நேசிக்கிறோமோ, அந்த அளவுக்கு மற்றவர்களையும் நேசிக்கவேண்டும். இவற்றைவிட மிகவும் முக்கியமான கட்டளைகள் வேறு எதுவும் இல்லை. நாம் ஆண்டவரிடத்தில் முழுமையாக அன்பு கூர்ந்தால்தான், நாம் நம்மிடத்தில் அன்பு கூருவது போல பிறனிடத்திலும் அன்புகூரமுடியும். இந்த இரண்டு கட்டளைகளுக்குள்ளும் எல்லா கட்டளைகளும் அடங்கியிருக்கிறது.

தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவது? தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்கள், அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து , அவருடைய வழிகளில் நடப்பார்கள். இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் எப்படி வாழ்ந்தாரோ, அதுபோல அவரைப் பின்பற்றி வாழ்வார்கள். இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஆவியானவருடைய வழிநடத்துதலின்படி வாழ்ந்து, அநேகரை இரட்சிப்புக்குள்ளாக வழிநடத்துவது தேவனிடத்தில் அன்புகூருவதாகும். தன்னைப்போல மற்றவர்களை நேசிப்பது என்பது, நாம் பெற்ற இரட்சிப்பை மற்றவர்களும் பெற்றுக் கொள்ளச் செய்வது, மற்றவர்களுக்காக ஜெபிப்பது, உதவி செய்வதாகும். நம் செய்கைகளிலும், நடக்கைகளிலும், பேச்சிலும் தேவ அன்பை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துகிறவர்களாக இருக்கவேண்டும். தேவனிடத்தில் அன்பாயிருப்பவன், அவருடைய பிள்ளைகள் எல்லோரிடமும் அன்பாயிருப்பான். அப்படி எல்லோரிடமும் அன்பாயில்லாதவன் தேவனை உண்மையாய் நேசிக்கவில்லை என்பதை அறிந்து கொள்ளலாம்.

### வேத வார்த்தைக்கு கீழ்ப்படிதல்

**நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாகும்** (1 யோவான் 5:3). தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடப்பதே அவரிடம் அன்பு செலுத்துவதாகும். அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதன்மூலம் அவரிடம் உள்ள அன்பை வெளிப்படுத்தலாம். கர்த்தர் ஆபிரகாமிடம் நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்கு காண்பிக்கும் தேசத்துக்குப் போ என்றார். கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னபடியே, கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, புறப்பட்டு போனான். அவன் தன் இனத்தாரையும், சொந்த இடத்தையும் விட தேவனை அதிகமாக நேசித்தான். தான் போகுமிடம் இன்னதென்று தெரியாதபோதிலும் தன் உறவினரை விட்டுப் புறப்பட்டு போனான். இதற்குப்பின், தேவன் ஆபிரகாமிடம் உன் நேசகுமாரனாகிய ஈசாக்கை அழைத்துக் கொண்டு மோரியா தேசத்திற்குச் சென்று அவனை எனக்கு தகன பலியாக கொடு என்றார். உடனே ஆபிரகாம் கீழ்ப்படிந்து, தேவன் போகச்சொன்ன இடத்திற்கு புறப்பட்டுப் போனான். தேவன் மேலுள்ள விசுவாசத்தினால், மகனை பலியிடமுற்பட்டான். தேவன் மேலுள்ள அன்பினால், கீழ்ப்படிந்து தேவனால் எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றிருந்தான். கர்த்தர் ஆபிரகாமை என் சிநேகிதன் என்று கூறுகிறார் (ஏசாயா 41:8). தேவன் ஆபிரகாமோடுகூட நண்பனோடு பேசுவதைப்போல பேசினார். தேவனை ஆபிரகாம் அதிகமாய் நேசித்ததால்தான், அவரோடுகூட ஐக்கியமாய் இருந்து அவருக்கு கீழ்ப்படிந்து நடந்தான்.

### நோவா

நோவா தேவனை நேசித்து, அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவருக்குப் பிரியமாய் வாழ்ந்தான். நோவா வாழ்ந்த காலத்தில், பூமியில் உள்ள மனுஷனுடைய அக்கிரமம் பெருகினதையும், அவன் இருதயத்தின் பொல்லாத நினைவுகளையும் தேவன் கண்டு, மனுஷனை பூமியில் உண்டாக்கினதற்காக வருத்தப்பட்டார். ஜனங்கள் பாவிகளாகவும், கொடூரமானவர்களாகவும் மாறியிருந்தனர். தேவன் அவர்களை அழிக்க தீர்மானித்தார். நோவா தேவனைப் பின்பற்றி அவரோடுகூட ஐக்கியமாய் வாழ்ந்தான். தேவன் நோவாவிடம் பூமியின் மேல், ஜலபிரளயத்தை உண்டுபண்ணி, பூமியில் உள்ள யாவற்றையும் அழிக்கப் போவதாகவும், ஒரு பேழையை உண்டாக்கும்படியாகவும் கூறினார். நோவா தேவன் தனக்கு கட்டளையிட்டபடியெல்லாம் பேழையை செய்து முடித்தான். ஜலபிரளயம் நாற்பது நாட்கள் உண்டானது.

நோவா கர்த்தருக்கு கீழ்ப்படிந்ததால் அவனும் அவனது குடும்பத்தாரும் காப்பாற்றப்பட்டார்கள். பூமியில் உள்ள யாவரும் அழிந்து போயினர். நமது வாழ்க்கையிலும், கர்த்தர் தீர்க்கதரிசிகள் மூலமாகவோ, வேதத்தின் மூலமாகவோ நம்மோடு பேசி, சில காரியங்களை செய்யவும், சில காரியங்களை செய்யக்கூடாது என்றும் எச்சரிக்கை கொடுக்கும்போது, நோவாவைப் போல தேவனுடைய வார்த்தைக்கு நாம் முற்றிலுமாக கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தையை புறக்கணித்துவிட்டு, நாம் நம் சுயபுத்தியின்மேல் சார்ந்து நமக்கு நலமானபடி காரியங்களை செய்யும் போது, பலவிதமான போராட்டங்களையும், வேதனைகளையும் சந்திப்போம்.

### யோனா

கர்த்தர், தீர்க்கதரிசியாகிய யோனாவை நினிவே பட்டணத்துக்குப் போய் கர்த்தருடைய வார்த்தையை சொல்லும்படி கூறினார். அவனோ கீழ்ப்படியாமல், தர்ஷிசுக்குப் போக கப்பலில் ஏறினான். கர்த்தர் சமுத்திரத்தின் மேல் பெரும் காற்றை வரச் செய்தார். யோனாவினால் இந்த ஆபத்து வந்தது என கப்பலில் உள்ளவர்கள் அறிந்து, அவனை சமுத்திரத்தில் போட்டுவிட்டார்கள். யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனை கர்த்தர் ஆயத்தப்படுத்தி இருந்தார். மூன்று நாட்கள் யோனா மீனின் வயிற்றுக்குள் இருக்கவேண்டி

யிருந்தது. கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்திருந்தால், இந்தவிதமான போராட்டம் அவனுக்கு ஏற்பட்டிருக்காது.

இயேசுகிறிஸ்து, இந்த பூமியில் வாழ்ந்தபோது, பிதாவின் சித்தத்தின் படியே செய்து, அவருக்கு கீழ்ப்படிந்திருந்தார். நாமும் வேதவார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

### வேத வார்த்தையை தியானித்தல்

தேவனிடத்தில் அன்புகூருகிறவர்கள், வேத வார்த்தையை வாஞ்சையோடு படித்து தியானிக்கிறவர்களாய் இருப்பார்கள். வேதத்தை படித்து தியானிப்பதன் மூலம் தேவனுடைய சிந்தையை நாம் அறிந்து கொள்ளலாம். தேவனுக்கு பிரியமானது எது, தேவனுக்கு பிரியமில்லாதது எது என்பதை அறிந்து கொள்ளலாம். **வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே** (யோவான்5:39). வேதத்தை படிக்கும் போது, அவரைப் பின்பற்றவும், அவரைப் பற்றி அறிந்துகொள்ளவும், அவரில் வளரவும், அவருடைய குணங்களை அறிந்து அவரோடுகூட நடக்கலாம்.நாம் வேதத்தை வாசிக்கிறவர்களாக மட்டுமல்ல, அதன்படி நடக்கிறவர்களாக இருக்கவேண்டும். வேதம் நமக்கு அறிவுரை தருவதாக, எச்சரிக்கை கொடுப்பதாக இருக்கும். அதை கவனத்தில் கொண்டு அதற்கு நாம் செவிசாய்க்க வேண்டும். ஆவியானவரின் உதவியோடு நாம் வேதத்தை படிக்கும்போது, வேதத்தின் ஆழங்களை நாம் அறிந்து கொள்ளலாம். நம் சுயஞானத்தை சார்ந்திராமல், ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் போது, அவருடைய ஞானத்தையும், வெளிப்பாடுகளையும் நமக்கு கொடுப்பார். இன்றைக்கும் அநேகர் வேதத்தின் பல ஆழமான கருத்துக்களை கற்று அறிந்து கொள்ளவேண்டும் என்ற வாஞ்சையில்லாததால், வேதத்தில் அநேககாரியங்களை அறியாமல் இருக்கின்றனர். **உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது** (சங்கீதம் *119:105*). ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் வளர வேண்டுமானால், வேதத்தை படிக்க நேரத்தை செலவிட வேண்டும். வேதத்தை ஆராய்ந்து பார்த்து அதன்படி நடப்பதற்கு கவனமாயிருக்க வேண்டும். அது நம்மை சரியான பாதையில் வழிநடத்தும், அன்பில்லாத தன்மைகள், மற்றவர்களுக்கு எதிராக போட்டியிடும் குணம், சண்டை போடும் குணங்கள் நம்மைவிட்டு அகன்றுவிடும். அப்போஸ்தலனாகிய பவுல்கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் இப்படியாக கூறுகிறான்: நீங்கள் ஆவிக்குரிய காரியங்களை கற்று அறியாததினால் குழந்தைகளாயிருக்கிறீர்கள் என்றும் இயேசு கிறிஸ்துவை அறியாத உலக மக்களைப்போல் இருக்கிறீர்கள் என்றும் குறிப்பிடுகிறான். **பொறாமையும், வாக்குவாதமும், பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா?** (*1* கொரிந்தியர் *1:3*). கிறிஸ்துவுக்குள் முழுமையாக வளர்ச்சியடையாதவர்கள், உலக பிரகாரமாக, தங்கள் சுயவிருப்பத் தின்படி காரியங்களை செய்து கொண்டிருப்பார்கள். கிறிஸ்துவுக்குள் வளர்ந்தவர்கள் தேவனோடு இசைந்திருந்து, தேவனுடைய விருப்பத்தின்படி நடப்பார்கள். நம்முடைய வாழ்க்கையில் நாம் எப்படியாக இருக்கிறோம்? தேவனுடைய விருப்பம் மற்றும் குறிக்கோளே நம் விருப்பமாக, குறிக்கோளாக மாறவேண்டும். நாம் நம் சுயவிருப்பத்தின்படி தொடர்ந்து நடக்கிறவர்களாக இருந்தால், தேவனுக்குள் வளருவதை நாமே தடுத்து விடுகிறோம்.

### இருதயத்தின் ஆழத்திலிருந்து ஜெபித்தல்

கர்த்தரை உண்மையாய் நேசிப்பவர்கள் எப்பொழுது ஜெபித்தாலும், உண்மையாக, கருத்தோடு ஜெபிக்கும் பழக்கத்தை உடையவர்களாக இருப்பார்கள். தனியாக ஜெபிக்கும் அனுபவம் உள்ளவர்களாக இருப்பார்கள். எல்லோரும் பார்க்கும்படியாகவும், பலரது கவனத்தை ஈர்க்கும்படியாக, மனித அங்கீகாரத்தை பெறுவதற்காக ஜெபிக்க மாட்டார்கள். இருதயத்தின் ஆழத்திலிருந்து ஊக்கமாக ஜெபிப்பார்கள். நாம் இப்படியாக ஜெபிக்க இயேசுகிறிஸ்து வாஞ்சிக்கிறார். நமது இருதயத்தின் ஆழத்தில், இயேசு கிறிஸ்துவை மட்டும் சிந்தித்து, அவர் மேல் கவனம் செலுத்தி, உண்மையாய் இருதயத்தில் உணர்ந்து, அவர் மீதுள்ள அன்பினால் நிறைந்து ஜெபிப்பதே அவரை முழுமையாக நேசிப்பதாகும். போலியாக, உண்மையில்லாமல், இருதயத்தின் ஆழத்திலிருந்து ஜெபிக்காமல், கடமைக்காக, சடங்காச்சாரமாக, பெருமைக்காக ஜெபிப்பதை இயேசுகிறிஸ்து விரும்பவில்லை. போலியாக ஜெபிப்பவர்கள், உண்மையில் தன்னிடம் காணப்படாத நல்ல குணங்களையும், எண்ணங்களையும், தான் கொண்டிருப்பதாக பாவனை செய்பவர்கள். கர்த்தருக்கும் அவர்களுக்கும் மிகவும் நெருங்கிய உறவு இருப்பதுபோல வெளியே காண்பிப்பதற்காக போலியாக ஜெபிப்பார்கள். இருதயத்தின் ஆழத்திலிருந்து ஜெபிக்க மாட்டார்கள். உண்மையில் கர்த்தருக்கும் அவர்களுக்கும் எந்தவித உறவும் இருக்காது. வேதத்தை படிக்கமாட்டார்கள். அபிஷேகத்தை பெற்றிருக்கமாட்டார்கள். கர்த்தர்மேல் அவர்களுக்கு அன்பிருக்காது. உலக ஆசையினால் நிறைந்திருப்பார்கள். மற்றவர்கள் தங்களை பக்தியுள்ளவர்கள் என்று நினைப்பதற்காக, உண்மையாய் கர்த்தரை நேசிப்பது போல ஜெபிப்பார்கள். சில சமயங்களில் வேலைகள், நாம் முழு இருதயத்தோடு ஜெபிப்பதிலிருந்து, அவர் மீதுள்ள அன்பிலிருந்து நமது கவனத்தை திருப்பும்படியாக இருக்கும். நாம் செய்யவேண்டியதெல்லாம், அவர் நம்மேல் வைத்துள்ள அன்பை மாத்திரம் நினைத்தால்போதும். நம் வாழ்க்கையில் அவர்செய்த நன்மைகளை நினைத்து நன்றி சொல்லவேண்டும்.தேவன் மீதுள்ள அன்பு, அவரையே நினைத்து, ஜீவனுள்ள தேவனோடுகூட உள்ள நெருக்கமான உறவை பெரிதாக்கும். அவர் நம்மேல் வைத்த அன்பை தியானித்து அவரோடுகூட உள்ள உறவில் வளருவோம். ஆபிரகாம், மோசேயோடு நண்பனோடு பேசினதுபோல தேவன் பேசினார். நம்மிடமும் அதுபோல பேச வாஞ்சிக்கிறார் (யாத்திராகமம் *33:11*, யாக்கோபு *2:23*). ஏனோக்கோடு, நோவாவோடு சஞ்சரித்ததுபோல நம்மோடுகூட சஞ்சரிக்க வாஞ்சிக்கிறார். நாம் அவருடைய சமூகத்தில் காத்திருந்து அவர் பேசுவதை கேட்போம்.

நாம் ஆராதிக்கும்போதும், கர்த்தரை முழுமனதுடன், இருதயத்தின் ஆழத்திலிருந்து ஆராதிக்கவேண்டும். சடங்காச்சாரமாக கர்த்தரை ஆராதிப்பதை கர்த்தர் விரும்பமாட்டார். தேவனுடைய நாமம் மட்டும் மகிமைப்படும்படியாக நாம் ஆராதனை செய்யவேண்டும். நமக்காக, தம்மையே ஜீவ பலியாகக் கொடுத்த இயேசுவின் அன்பை நினைத்துப் பார்த்து, நம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து, அவரைப் போற்றிப்பாடி, துதித்து ஆராதிக்க வேண்டும்.

### தேவனா? உலகமா?

**உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்:**

**ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்** *(1* யோவான் *2:15,16)*. இந்த உலகத்தில் அன்புகூருகிறவர்களிடத்தில் தேவ அன்பு இருக்காது. உலகத்திலுள்ள மனிதர்களை, பணத்தை, பதவியை, பொருட்கள், வசதி வாய்ப்புகளை பெரிதாக பார்ப்பவர்களால் தேவனிடத்தில் முழுமையாக அன்புகூர முடியாது. ஏனென்றால் தேவனுடைய அன்பை அவர்கள் சரியாக அறிந்து கொள்ளாத தினாலேயே,தேவன் நம்மை எவ்வள வாக நேசிக்கிறார் என்பதையும், மற்ற மனுஷர்களுடைய அன்புக்கும், நம்பரம தகப்பன் நம்மீது வைத்துள்ள அன்புக் கும் வித்தியாசம் உண்டு. நம் பரம தகப்பன் நம்மீது வைத்துள்ள அன்புக்கு இணை ஏதுமில்லை. தாய் தகப்பனுடைய அன்புகூட மாறிப் போகும். ஆனால், கர்த்தருடைய அன்போ என்றும் மாறாது. தேவன் நம்மீது வைத்துள்ளஅன்பை தம்முடைய ஜீவனைக் கொடுத்து வெளிப்படுத்தினார். அப்படிப்போல நேசிக்க இந்த உலகத்தில் வேறு யாரேனும் உண்டா?

அழிந்துபோகும் இந்த உலகத்தையோ, உலகத்திலுள்ள பொருட்களையோ நாம் நேசிக்கக்கூடாது. நாம் உலகத்தைவிட்டு ஒருநாள் கடந்து போகவேண்டும். உலக பொருட்களை விட்டுவிட்டுத்தான் நாம் போகவேண்டும். மாம்சத்தை திருப்திப்படுத்தும் பொருட்களை விரும்புதல், நாம் பார்க்கிற பொருட்களை விரும்புதல், நம்மிடம் உள்ள பொருட்களால் மிகவும் கர்வமாக உணர்தல், இவை அனைத்தும் பிதாவிடமிருந்து வருவதில்லை. உலகத்திலுள்ளவைகளினால் வருபவை. உலகத்திலுள்ளவைகளை நேசிப்பவர்கள் இப்படிப்பட்ட காரியங்களால் நிறைந்திருப்பார்கள். பிதாவின் அன்பு இவர்களிடத்தில் இருப்பதில்லை. பரம தகப்பனை உண்மையாக நேசித்தால், இந்த அழிந்து போகின்ற காரியங்களின் மீது ஆசை வராது.

நாம் எப்படியாக இருக்கிறோம்? உலகத்தை நேசிக்கிறோமா? தேவனை நேசிக்கிறோமா? நம் ஆசை உலகத்தின் மீதும் உலக பணம், பொருட்கள், பதவி, மனிதர்கள்மீதும் இருக்கிறதா? நாம் தேவனை குறித்து சிந்திக்கிறோமா? அல்லது உலக காரியங்களை சிந்திக்கிறோமா? பணத்தையும், பொருட்களையும் சேர்ப்பதைக் குறித்தும் படிப்பு, பதவியைக் குறித்தும் சிந்திக்கிறோமா? லோத்தின் மனைவி உலக ஆசையினால் நிறைந்திருந்ததால், தான் இருந்த பட்டணத்தை திரும்பிப் பார்த்து உப்புத் தூணாக மாறினாள். லோத்துவும், அவனது குடும்பத்தாரும் சோதோமில் குடியிருந்தனர். அங்குள்ள ஜனங்கள் மிகவும் பொல்லாதவர்களாய் இருந்ததால் கர்த்தர் அதை அழிக்க சித்தங்கொண்டார். லோத்தையும், அவன் குடும்பத்தையும் சோதோமை விட்டு வெளியே கொண்டு வந்து விட்டு, இந்த பட்டணத்தை திரும்பிப்பார்க்காமல் ஓடுங்கள் என்று கர்த்தர் எச்சரித்தார். லோத்தின் மனைவியோ உலகப் பொருட்களையும், பட்டணத்தையும் நேசித்து திரும்பிப் பார்த்து, உப்புத்தூணானாள். லோத்தின் மனைவியைப்போல இவ்வுலகத்திலுள்ள பணம், பதவி, புகழ், நண்பர்கள், ஆஸ்திகள் முதலியவற்றை விரும்புகிறவர்கள் தேவனோடுகூட ஐக்கியமாய், அன்பாய் இருக்கமுடியாது. இவ்வுலகத்தைவிட்டு கடந்து செல்லும்போது, தேவனோடுகூட வாழும் நிலையான வாழ்க்கையை இழந்து போவார்கள்.





உலக பிரகாரமாக இருப்பது என்பது, வெளியே நாம் நடந்து கொள்ளும் முறையை வைத்து மட்டும் அல்ல. நாம் யாருடன் பழகுகிறோம், எங்கே செல்கிறோம் என்பதுடன் நமக்குள்ளே நடக்கிற காரியமாயிருக்கிறது. உலகப்பிரகாரமான காரியங்கள் நமது இருதயத்திற்குள்ளிருந்துதான் ஆரம்பிக்கிறது. சரீரம் விரும்புவதை நிறைவேற்றுவது, ஒன்றன்மீது மிகுதியான ஆசை கொண்டு, அதனை அடைய விரும்புவது. மேலும் அதைக்குறித்து இடைவிடாது சிந்தித்துக் கொண்டே இருப்பது. அது அவர்களுக்கு மகிழ்ச்சியையும், மனநிறைவையும் அளிக்கும். கண்களின் இச்சையினால், தனக்கு இன்னும் வேண்டும்என்று பொருட்களைப் பெருக்க ஆசைப்படுவதும், வாழ்க்கையில் பணமும் உடைமைகளுமே மேலானதாக தேவனுடைய இடத்தில் இருக்கும். தன்னிடம் பணம், பொருட்கள், உடைமைகள் இருப்பதால், தன்னால் எல்லாம் செய்ய முடியும் என்றும், தன்னிடம் இருப்பதைக் குறித்தும் வீண்பெருமை பேசிக் கொண்டிருப்பார்கள். சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருப்பதையும், உயர்ந்த பதவியில் இருப்பதையும் பெருமையாக எண்ணிக் கொண்டிருப்பார்கள். இந்த உலகம் பொல்லாதது. அசுத்தம், கொலை, கொள்ளை, இச்சை, பொருளாசை போன்ற பாவங்களால் நிறைந்தது. இதிலிருந்து விடுவித்து, நரகத்துக்கு போகாதபடி நம்மை பாதுகாத்துக் கொள்ள, இயேசு கிறிஸ்து நமது பாவங்களுக்காக தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார். நாம் இந்த உலகத்தின் மீதுள்ள ஆசையை விட்டுவிட்டு தேவனை அதிகமாக நேசிக்கவேண்டும். அதிக பணம் சம்பாதிக்கவேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டு வாழ்வதும், தேவனைவிட உலக பொருளை விரும்புவதும் தவறு. இந்த உலகத்தில் நாம் வாழ்வதற்கு பணம் தேவைதான். அதைக் குறித்தே எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருக்கக்கூடாது. தேவனுக்காக இந்த உலகத்தில் வாழ்கிறோமா அல்லது பணம், பொருள், சொத்துக்கள் சேர்ப்பதற்காக வாழ்கிறோமா?

உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை, இதைத்தான் வேதம் இப்படியாகச் சொல்லுகிறது: இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது. தேவனுக்கும் உலக பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களால் கூடாது. உலகத்தை நேசித்தால், தேவனை நேசிக்க முடியாது. தேவனை நேசித்தால் உலகத்தை நேசிக்க முடியாது. தேவனிடத்திலும், உலகத்தில் உள்ளவைகளிடத்திலும் ஒருசேர நம்மால் அன்புகூர முடியாது. உலகத்திற்கு சிநேகிதனாக இருப்பது, தேவனை வெறுப்பதுபோல என்பதை அறிந்து கொள்ளலாம்.

சாலொமோன் ராஜாவானபோது, தேசத்தை ஆள ஞானமும், உணர்வும் உள்ள இருதயத்தை தாரும் என்று கர்த்தரிடம் கேட்டு பெற்றுக் கொண்டான். கர்த்தர் அவனுக்கு ஞானத்தையும், கேட்காத ஐசுவரியத்தையும் கொடுத்து, அவனை ஆசீர்வதித்தார். பூமியின் சகல ராஜாக்களைப் பார்க்கிலும், ராஜாவாகிய சாலொமோன் ஐசுவரியத்திலும், ஞானத்திலும் சிறந்தவனாயிருந்தான். தேவன் அவனை வைத்துதான் தேவாலயத்தைக் கட்டினார். தேவன் இரண்டுமுறை தரிசனமாகி அவனோடு கூட பேசினார். தேவனோடுகூட நெருங்கிய உறவில் இருந்த அவன் பின்னாட்களில் அந்நிய ஸ்திரீகள்மேல் ஆசை வைத்து அவர்களோடு ஐக்கியமாயிருந்தான். அவர்கள் அவனை தேவனுடைய வழியிலிருந்து திருப்பி, அந்நிய தெய்வங்களை பின்பற்றும்படி

செய்தனர். கர்த்தர் சாலொமோனுக்கு தரிசனமானபோது, கர்த்தருடைய கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொள்ளும்படியும், உண்மையும், உத்தமுமாக அவனுடைய தகப்பனாகிய தாவீதைப்போல நடக்கும்படியாகவும், அந்நிய தேவர்களை பின்பற்றி அவற்றை சேவிக்கக்கூடாது என்றும் கூறினார். ஆனால், அவன் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை. தன் தகப்பனாகிய தாவீதைப்போல கர்த்தரை முழுமையாய்ப் பின்பற்றாமல், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். தாவீதோ கர்த்தரை நேசித்து, அவருடைய வழிகளில் நடந்தான். **சாலொமோனைப் போன்ற ராஜா அநேகம் ஜாதிகளுக்குள்ளே உண்டாயிருந்ததில்லை; அவன் தன் தேவனாலே சிநேகிக்கப்பட்டவனாயிருந்தான்; தேவன் அவனை இஸ்ரவேலனைத்தின் மேலும் ராஜாவாக வைத்தார்; அப்படிப்பட்டவனையும் மறுஜாதியான ஸ்திரீகள் பாவஞ்செய்யப்பண்ணினார்களே** (நெகேமியா 13:26). தேவன் அவனை நேசித்தார். ஆனால் சாலொமோனோ, தேவனை நேசிக்காமல், கடைசிவரை தேவனில் நிலைத்திருக்காமல், ஸ்திரீகளை நேசித்து, தேவனுக்கு விரோதமாக பாஞ்செய்தான். நாம் எப்படியாக இருக்கிறோம்? கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் நேசிக்கிறார். நாமும் அவரை நேசிக்க விரும்புகிறார். கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து உயர்த்தும்போதும், அவருடைய வழிகளில் தொடர்ந்து நாம் நடக்கவேண்டும். ஒவ்வொருநாளும் நம்மை நாமே ஆராய்ந்து, தேவனை விட்டு விலகும் காரியங்கள் நம்மிடம் இருந்தால், மனந்திரும்பி தவறுகளை அறிக்கையிட்டு தேவனிடம் மன்னிப்பை பெற்றுக் கொண்டு நம்மை சரி செய்து கொள்ளவேண்டும். தேவனுக்கும் நமக்கும் உள்ள உறவிலிருந்து, எந்த மனிதர்களும் நம்மை பிரிக்காதபடி நம்மை காத்துக் கொள்ள வேண்டும்.



இயேசு கிறிஸ்து மனிதனாக வந்தபோது, நம்மைப் போல சோதனைக் குட்படுத்தப்பட்டார். ஆனால், அவர் பாவமே செய்யவில்லை. நமக்கு சோதனைகளும் பாடுகளும் வரும்போது, அவரை நோக்கிக் கூப்பிடும்போது, அவர் நமக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார் (எபிரெயர் 2:18). இயேசு கிறிஸ்துவை சாத்தான் சோதித்தபோது, வேதவசனத்தைச் சொல்லி மேற்கொண்டார். நாம் வேதவார்த்தையை தினமும் படித்து தியானிக்க வேண்டும். நம் வாழ்க்கையிலும் சோதனைகள் வரும்போது, வேத வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, இயேசுகிறிஸ்துவைப் போல சோதனையை மேற்கொள்ளலாம்.

## தேவ அன்பு

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்** (யோவான் 3:16). இயேசு கிறிஸ்துவே உண்மையான தேவன். அவரை விசுவாசிக்கிறவர்கள், அவரே நம்மை காப்பாற்றுகிறவர், பாதுகாக்கிறவர் என்று அவர் மீது நம்பிக்கை வைத்து அவரை சார்ந்து வாழ்வார்கள். உலகத்திலுள்ள எல்லா மக்களின் பாவங்களுக்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார்.



அதற்காகவே தேவன், தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்மேல் அவர் வைத்த அன்பை வெளிப்படுத்தினார். நாம் ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படுவதற்காக, இந்த உலகத்தின் பாவத்திலிருந்து மீட்டு எடுக்க, தேவன் தம்முடைய குமாரனை அனுப்பினார். இயேசு கிறிஸ்துவே தேவன் என்று விசுவாசித்து, பாவமன்னிப்பை பெற்றுக் கொண்டு, அவருடைய வழிகளில் நடக்கிறவர்கள், இந்த உலகத்தை விட்டு கடந்து செல்லும்போது, நரகத்துக்கு போகாமல், தேவனோடுகூட பரலோகத்தில் வாழும் பாக்கியத்தை பெறுகிறார்கள். **ஒருவனும் கெட்டுப்போவது, பிதாவின் சித்தமல்ல** (மத்தேயு 18:14). இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே நம் பாவங்களை கழுவி சுத்திகரித்து நம்மை பரிசுத்தமாக்கும். நாம் ஒவ்வொருவரும் இவ்வுலகத்தை சார்ந்து வாழாமல், அவரைச் சார்ந்து, அவருக்கு பிரியமான சமாதானமுள்ள ஒரு வாழ்க்கையை வாழ விரும்புகிறார். நாம் பாவிகளாயிருக்கையில், கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம் மேல் வைத்த அன்பை விளங்கப்பண்ணுகிறார் (ரோமர் 5:8). நாம் பாவிகளாக இருக்கும்போதே, நமக்காக ஜீவனைக் கொடுத்து, நம்மீது அவர்வைத்த அன்பை வெளிப்படுத்தினார். நாம் இரட்சிக்கப்பட்டு அவருடைய பிள்ளைகளாக மாறும்போது, எவ்வளவு அதிகமாய் நம்மை நேசிப்பார்.நம்மை ஆசீர்வதிப்பார். நம்முடைய தேவைகளை சந்திப்பார். நம் நோய்களை நீக்குவார். மனகவலையை நீக்கி ஆறுதல் தருவார். வாழ்க்கையில் நமக்கு வரும் போராட்டங்கள், வேதனைகள், பாடுகளை நீக்கி நமக்கு சமாதானம், சந்தோஷம் தருவார். பரிசுத்த ஆவியானவரால் நம்மை நிரப்பி அவருடைய அன்பை நமக்கு வெளிப்படுத்துவார். நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது (ரோமர் 5:5). ஒவ்வொருநாளும் அவருடைய கிருபையையும், அவருடைய அன்பின் வழி நடத்துதலையும் கேட்டுப் பெற்றுக் கொள்ளவேண்டும். தேவன் நம்மை நேசித்து, அவருடைய அன்பால் நிரப்பியிருக்கிறார். அனுதினமும் நம்மை போதித்து வழிநடத்துகிறார். நாமும் தேவன் நம்மை நேசித்ததுபோல அவரையும், மற்றவர்களையும் நேசிக்க வேண்டும்.

இயேசுகிறிஸ்து நமக்காக அவரையே ஜீவபலியாக ஒப்புக் கொடுத்தார். உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்த்தார். அந்த அன்பை யாராலும் அளவிட முடியாது. நாமும் மற்றவர்களின் பிரச்சனைகளை பொறுமையோடு கேட்டு அவர்களுக்கு உதவுபவர்களாக, ஆதரவு தருபவர்களாக இருக்கவேண்டும். அவரை சவுக்கினால் அடித்தனர். கை, கால்களில் ஆணியை அடித்தனர். முள் கிரீடத்தை தலையில் வைத்து கோலால் பலமுறை அடித்தனர். முதுகில் சவுக்கை இழுத்தபோது, சதையை பிய்த்து கொண்டுவந்தது. உழுகிறவர்கள் என் முதுகின்மேல் உழுது, தங்கள் படைச்சால்களை நீளமாக்கினார்கள் (சங்கீதம் 129:3). அவரை அடித்து உச்சி முதல் உள்ளங்கால்வரை காயப்படுத்தினார்கள். நமக்காக அத்தனை வேதனைகளையும் பொறுமையோடு சகித்தார். நம்மை நேசித்ததால் எல்லா பாடுகளையும் தாங்கினார். தம்மை சிலுவையில் அறைந்தவர்களை அவர் சபிக்கவில்லை. எதிர்த்து பேசவில்லை. அவர்களுக்காக பிதாவை நோக்கி ஜெபித்தார். இன்றும் நமக்காக பரிந்துபேசிக் கொண்டிருக்கிறார் (ரோமர் 8:34). தியாகம் நிறைந்த இயேசு கிறிஸ்துவின் அன்புக்கு நிகர் ஏதுமில்லை. இப்படியாக நம்மை நேசித்த அவரை

நாமும் நேசிப்போம். நம்மைப்போல மறறவர்களையும் நேசிப்போம். கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பிலிருந்து நம்மை எதனாலும் பிரிக்க முடியாது என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறான். இயேசு கிறிஸ்து மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிரோடு எழும்பினபோது, தன் சீஷர்களுக்குத் தரிசனமானார். அப்பொழுது அவர் பேதுருவைப் பார்த்து, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என் ஊழியத்தைச் செய்வாயாக என்று கேட்டார். நம் ஒவ்வொருவரிடமும் இதையே கேட்கிறார். நம்முடைய அன்பு மாயமற்றதாக, மெய்யானதாக இருக்க விரும்புகிறார்.

## யோசியா ராஜா

யோசியா ராஜா, கர்த்தரிடத்துக்குத் **தன் முழு இருதயத்தோடும் தன் முழு ஆத்துமாவோடும், தன் முழு பலத்தோடும், கர்த்தருடைய கட்டளைகளின்படிச் செய்ய தன் மனதைச் சாய்த்தான்** (1 இராஜாக்கள் 23:25). தான் கர்த்தருடைய வார்த்தையின்படி நடந்து கொண்டது மட்டுமல்லாமல் தன் நாட்டு மக்களும் நடக்கும்படி செய்தான். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடந்தான். யோசியாவைப் போன்ற ஒரு ராஜா இதற்கு முன்னால் எப்போதும் இருந்ததில்லை, இவனுக்குப்பின்னும் இருந்ததில்லை. கர்த்தர் மேலுள்ள அன்பினால்தான் அவருக்கு கீழ்ப்படிந்து நடந்தான். ஜனங்களையும், அப்படியாக நடத்தினான். **நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்** (உபாகமம் 5:4) என்ற வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, தன் நாட்டிலுள்ள விக்கிரங்களை அகற்றி, அவற்றை சுட்டெரித்து, சிலைகளை வழிபடுவது பாவம் என்று ஜனங்களுக்கு உணர்த்தினான். ஜனங்களை வரவழைத்து, கர்த்தருடைய வார்த்தையை அவர்கள் கேட்கும்படியாக வாசித்தான். கர்த்தருடைய வார்த்தையை பின்பற்றவும், கீழ்ப்படிந்து நடக்கவும் முழுமனதோடு தீர்மானம் செய்தான். ஜனங்களும் அவனோடு கூட கீழ்ப்படிந்து நடக்க தீர்மானம் செய்தார்கள்.

நாமும் நம்முடைய வாழ்க்கையில், தேவன் மேலுள்ள அன்பினால் நிறைந்து, அவருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்போம். மற்றவர்களுக்கும் தேவனுடைய வார்த்தையைச் சொல்லி அவரண்டை நடத்துவோம். யோசியா ராஜா கர்த்தருடைய வார்த்தையை வாசித்தபோதுதான், பாவங்களை அடையாளம் கண்டுகொண்டு, பாவ உணர்வடைந்து, பாவ பழக்கவழக்கங்களை அகற்றினான். விக்கிரகங்களை வழிபடுவதை தடுத்தான். நாமும் பாவ செயல்களையும், பாவத்திற்கு காரணமாய் இருப்பவற்றையும் நம்மைவிட்டு அகற்ற வேண்டும். பாவம் செய்வதற்கு ஏற்ற சூழ்நிலையையும், பாவம் செய்யத் தூண்டும் உறவுகளையும் நம்மை விட்டு விலக்குவோம். நம் வாழ்க்கை முறைகளும், செயல்களும், பணிகளும் நம்மை பாவம் செய்யும்படியாக கொண்டுபோய்விடும். தவறு என்று அறிந்திருந்தும் அதைச் செய்ய வேண்டும் என்ற உணர்வை கொண்டு வந்து, பாவத்தில் நம்மை இழுத்து விடும். இதற்கு விலக்கி நம்மை காத்துக்கொள்ள வேதவார்த்தையை படித்து, அதன்படி நடப்போம்.

## தாவீது

கர்த்தர் தாவீதை தன் இருதயத்துக்கு ஏற்ற மனிதனாகக் கண்டார். எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனை குறித்துச் சாட்சியுங் கொடுத்தார். தாவீது சிறுவயதிலிருந்தே கர்த்தரை அதிகமாக நேசித்தான். ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது கர்த்தரை பாடி ஆராதித்தான். சவுல் கர்த்தருடைய





வார்த்தையை புறக்கணித்து அவருக்கு கீழ்ப்படியாததால், கர்த்தர் சவுலை புறக்கணித்துவிட்டு தாவீதை தெரிந்து கொண்டு, ராஜாவாக அபிஷேகம் பண்ணினார். கர்த்தர் தாவீதை நேசித்தார். அவனைக் குறித்து கர்த்தர் கூறியதாவது: என்னென்ன செய்ய வேண்டுமென நான் நினைக்கிறவற்றை அவன் செய்வான். தாவீது கர்த்தரை நேசித்ததால்தான், அவருக்கு கீழ்ப்படிந்து அவருடைய வழிநடத்துதலின்படி எல்லா காரியங்களையும் செய்து வந்தான்.

தாவீது தேவன்மீது மிகுந்த வாஞ்சையாய் இருந்தான். அவனுடைய ஆத்துமா ஜீவனுள்ள தேவன்மேல் தாகமாயிருந்தது. தேவனை சார்ந்து வாழ்ந்தான். நாம் ஆவிக்குரிய ஜீவியத்தில் கர்த்தர்மேல் தாகமாயிருக்கும்போது அவருடைய பிரசன்னத்தை நமக்குத் தருவார். நாம் எந்த அளவு தேவன்மீது வாஞ்சையாய் இருக்கிறோம்? தேவன் மட்டுமே நம் தாகத்தை தீர்க்க முடியும். தாவீதின் வாஞ்சை விருப்பம் எல்லாம் தேவன் மீது இருந்தது. தேவனே நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; நீரற்று உலர்ந்த பாழாய்போன தேசத்தைப் போன்று என்ஆத்துமாவும், சரீரமும் உமக்காக தாகமாயிருக்கிறது (சங்கீதம் 63:1). நாமும் தாவீதைப்போல தேவன்மேல் வாஞ்சையோடு, விருப்பத்தோடு, தாக உணர்வுடன் அவரோடுகூட உள்ள உறவை வளர்த்துக் கொள்ளவேண்டும். தேவ சமுகத்தில் அதிக நேரம் காத்திருக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். தனித்திருந்து தேவனை துதித்து பாடவேண்டும். சத்தத்தை உயர்த்தி மகிழ்ச்சியோடு தேவனை ஆராதிக்க நம்மை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். **என் கைகளை உமக்கு நேராக விரிக்கிறேன்; வறண்ட நிலத்தைப்போல என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது** (சங்கீதம் 143:6). தாவீது கரங்களை உயர்த்தி தேவனை நோக்கி ஜெபிக்கிறான். வறண்ட நிலம் மழைக்காக எதிர்நோக்கியிருப்பதைப்போல அவன் ஆத்துமா கர்த்தரை நோக்கிப் பார்க்கின்றது. எல்லோராலும் புறக்கணிக்கப்பட்டு தனிமையாய் இருக்கிறீர்களா? தாவீதைப் போல கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள். அவர் மட்டுமே நம்மை திருப்திபடுத்தி, நம் இருதயத்தின் ஆழத்திலுள்ள ஏக்கங்களை, விருப்பங்களை நிறைவேற்ற முடியும் வாழ்க்கையில் எல்லோராலும் கைவிடப்பட்டு, நம்பிக்கையிழந்த சூழ்நிலைகள், போராட்டங்கள், சோர்வுகள் வரும்போது, தேவன் நம்கூட இல்லாததுபோல, நம்மைவிட்டு விலகிவிட்டதுபோல இருக்கும். இக்கட்டான நேரத்திலும் நம் ஆத்துமா அவரை நோக்கிக் கூப்பிடவேண்டும். அவர் நம்மை பாதுகாப்பார்.எல்லா இக்கட்டான சூழ்நிலையையும் மாற்றிப்போடுவார். இழந்துபோன எல்லாவற்றையும் மீட்டுக் கொடுப்பார். இழந்துபோன சமாதானத்தை மீண்டும் தருவார். கர்த்தர்மேல் அன்பு வைத்து, அவரைத் தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது. தாவீதுக்கு கர்த்தர் தன்னை விட்டு விலகினது போல இருந்தபோது, அவரை நோக்கிக் கூப்பிட்டு, அவரோடுகூட உள்ள உறவை மீண்டும் பெற்றுக் கொண்டான். நெருக்கடியான சூழ்நிலையில் கர்த்தருக்குள் (கர்த்தர் அவன்மேல் வைத்துள்ள அன்பை நோக்கிப் பார்த்து) தன்னை திடப்படுத்திக் கொண்டான்.

நாம் ஜெபிக்கும்போதும், துதிக்கும் போதும், ஆராதிக்கும்போதும், வேதத்தை தியானிக்கும்போதும், கடமைக்காக, மேலோட்டமாக செய்யாத படி, கர்த்தர் நம்மேல் வைத்த அன்பை நினைத்து முழுமையாக அன்பு கூருவோம்.



# எளிமையான ஜெபத்தின் வல்லமை – 2

**– ஜாய்ஸ் மேயர்**

**ஜெபம் தொடர்ச்சி...**

எவ்வளவு எளிமையாய் ஜெபிக்கிறோமோ, அதுவே நல்ல ஜெபமாகும். நாம் மாம்சத்திலிருந்து சுயமாக ஜெபித்தோமானால், 5 நிமிட ஜெபம் என்பது 1 மணி நேர ஜெபம்போல தோன்றும். ஆனால், பரிசுத்த ஆவியில் நிரம்பி ஜெபித்தோமானால், 1 மணி நேர ஜெபம்கூட 5 நிமிடம்தான் ஜெபித்தது போல இருக்கும்.

எவ்வளவு நேரம் ஜெபிக்கின்றீர்கள் என்பது முக்கியமல்ல. எவ்வளவு உண்மையோடு, விசுவாசத்தோடு ஜெபிக்கின்றீர்கள் என்பதுதான் முக்கியம். நம் வாழ்க்கையில் சில காரியங்களுக்காக சில சமயங்களில் அதிக நேரம் ஜெபிக்க வேண்டியிருக்கும். அப்போது நாம் அதிக நேரம் ஜெபிக்கவேண்டும். ஆனால், அதிக நேரம் ஜெபிக்க வேண்டும் என்பதற்காக (வெறுமனே நேரத்திற்காக) ஜெபிக்கக் கூடாது. சுருக்கமாக, ஆவியில் திருப்தியைப் பெறும்வரை ஜெபிக்க வேண்டும்.

ஜெபம் என்பது நமது சுவாசத்தைப் போல இயற்கையாக இருக்க வேண்டும். முழங்காற்படியிட்டு ஜெபியுங்கள். முழங்கால் வலிக்கும்போது, முகங்குப்புற விழுந்து ஜெபியுங்கள். முதுகு வலிக்கும்போது, உட்கார்ந்து ஜெபியுங்கள். உங்களுக்கு எப்படி இருந்தால் சௌகரியமாக இருக்குமோ, அப்படிப்பட்ட நிலையிலிருந்து ஜெபியுங்கள்.

ஒரு குறிப்பிட்ட மொழிநடையில்தான் ஜெபிக்கவேண்டும், அப்போதுதான் கர்த்தர் கேட்பார் என்று நினைக்காதீர்கள். அன்றாட வாழ்க்கையில் நீங்கள் பேசும் பாஷையில் கர்த்தரிடம் பேசுங்கள். வார்த்தைகளினால் சொல்ல முடியாத உங்கள் இருதயத்திலுள்ள காரியத்தையும் அவர் அறிவார். உங்கள் பெரு மூச்சையும் அவர் புரிந்து கொண்டிருக்கிறார்.

நம்முடைய எந்த முயற்சியும் பலனளிக்கவில்லை என்கிற சூழ்நிலை வரும் போதுதான் கடைசியாக நாம் ஜெபிக்கிறோம். முதலாவது ஜெபியுங்கள். ஜெபம், கர்த்தரிடமிருந்து அற்புதங்களைப் பெற்றுத்தரும். ஜெபிப்பதற்கு என்று நேரம், சூழ்நிலை இல்லை என்று முணுமுணுப்பதற்குப் பதில் இருக்கின்ற இடத்தில், சூழ்நிலையில் ஜெபியுங்கள்.

நீங்களாக, சுயமாக ஜெபிக்காதீர்கள். ஜெபிப்பதற்கு முன்பு அமைதியாகக் காத்திருங்கள். பரிசுத்த ஆவியானவர் இன்ன காரியத்திற்காக ஜெபி என்று உங்கள் இருதயத்தில் உணர்த்தும்வரை காத்திருங்கள். இதுவே ஆவியில் ஜெபிப்பதாகும். உங்கள் கண்களுக்கு எதிராக இருக்கும் சில முக்கியமானக் காரியங்களுக்காக உடனடியாக ஜெபியுங்கள். அதற்கு கர்த்தருடைய வழிநடத்துதலுக்காகக் காத்திருக்க வேண்டாம்.

ஜெபம் என்பது நமக்குள்ள திறமை அல்ல. ஜெபம் என்பது கர்த்தருக்கும் நமக்கும் உள்ள உறவு. கர்த்தருடைய உறவில் எப்படி நாம் வளர்கிறோமோ அப்படித்தான் ஜெபிப்பதிலும் வளர்வோம். அதற்கு இதுதான் முடிவு என்று இல்லை.

ஜெபத்திலே சில சமயம் உங்களுக்கு திருப்தி இல்லாமல், வறட்சியாக இருக்கலாம். கர்த்தரும் அந்த உணர்வைத் தரலாம். சாத்தானும் அந்த எண்ணத்தைத் தரலாம். அது குறித்து கர்த்தரிடம் கேளுங்கள். சில சமயங்களில் கர்த்தர், உங்களை ஜெபத்தின் அடுத்த நிலைக்கு உயர்த்துவதற்காக அப்படிப்பட்ட அதிருப்தியை, வறட்சியைத் தருவார். ஜெபத்திலே காத்திருங்கள். கர்த்தர், ஜெபத்திலே புதிய காரியங்களை உங்களுக்குக் கற்றுத் தருவார்.

இந்த உலகத்திலேயே மிகவும் வல்லமையுள்ளது ஜெபமே. ஜெபம்தான் சர்வ வல்லமையுள்ள தேவனின் வல்லமையை நம்முடைய அனுதின வாழ்க்கையில் கொண்டு வருகிறது. நாம் ஜெபிப்பதினால், சாதாரண ஜனமாக இருப்பினும், அசாதாரண வல்லமை உள்ளவர்களாக இருக்கிறோம். இயற்கையான உலகில் வாழ்ந்தாலும், இயற்கைக்கு அப்பாற்பட்ட வாழ்க்கையை வாழ்கிறோம்.

வேதத்தில் 2 நாளாகமம் 20-ம் அதிகாரத்தில் யோசபாத் ராஜாவை, அம்மோனியர், மோவாபியர், சேயீர் மலை தேசத்தார் எதிர்த்து வருகிறார்கள். அப்போது யோசபாத் ராஜாவும் ஜனங்களும் சேர்ந்து, உபவாசித்து கர்த்தரை நோக்கி ஜெபிக்கிறார்கள். கர்த்தர், எதிரிகளை ஒருவருக்கொருவர் சண்டையிடச் செய்து வீழ்ந்துபோகப் பண்ணுகிறார்.கர்த்தர், அவர்களுக்காக யுத்தம் பண்ணி, ஜெயத்தைத் தருகிறார்.

சில ஜெபங்களுக்கு உடனடியாகப் பதில் கிடைத்துவிடும். சில ஜெபங்களுக்குப் பதில் வர கொஞ்சம் காலதாமதமாகலாம். கர்த்தரால் எல்லாவற்றையும் செய்ய முடியும். அவரால் செய்யமுடியாத காரியம் எதுவுமில்லை. அதனால், ஜெபிப்பதை விட்டுவிடாதீர்கள். இடைவிடாமல், தொடர்ந்து ஜெபியுங்கள்.

துதி, ஆராதனை, நன்றி என்பதும் ஜெபமே. துதி என்பது கர்த்தரால் செய்யும் காரியங்களைப் பற்றியது. ஆராதனை என்பது கர்த்தரின் குணாதிசயத்தைப் பற்றியது. நன்றி என்பது கர்த்தர் நமக்கு செய்த காரியங்களுக்காகவும், அவர் நமக்கு எப்படிப்பவராக இருக்கிறார் என்பதற்கும் நன்றி சொல்வதாகும். துதிக்க, துதிக்க நம்முடைய பெலன் கூடும். விசுவாசம் வளரும். நமக்கு எதிராக வரும் காரியங்களெல்லாம் ஒன்றுமில்லாமல் போகும். ஆராதனை என்பது இருதயத்திலிருந்து வருவதாகும். இதை வார்த்தைகளினால் விவரிக்க முடியாது. நடனமாடி, பாடி, கைகளைத் தட்டி, கைகளை உயர்த்தி கர்த்தர் நமக்கு எப்படிப்பட்ட உறவில் இருக்கிறார் என்பதை காண்பிக்கிறோம். கர்த்தர் நமக்கு கொடுத்துள்ள ஒவ்வொரு காரியத்திற்காகவும் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். இவையெல்லாம் அவர் செய்யும் காரியம்தானே என்று லேசாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

ஜெபத்தில் நம்மையே முழுமையாகக் கர்த்தருக்கு அர்ப்பணிக்க வேண்டும். ‘‘என்னைக் கொண்டு என்ன செய்ய சித்தமாயிருக்கிறீரோ, செய்யும்’’ இதுவே முழுமையாக நம்மை கர்த்தருக்கு அர்ப்பணிக்கும் ஜெபமாகும். அப்படி உங்களை நீங்கள் அர்ப்பணிக்கும்போது உங்களுக்குள்ளே விடுதலையை உணர்வீர்கள். அர்ப்பணிப்பு என்பது சாதாரணமான காரியமல்ல. அர்ப்பணிப்பு என்பது கர்த்தரை நாம் அழைப்பதாகும். நம்மில் அவர் கிரியை செய்ய அழைப்பதாகும். நம் உள்ளார்ந்த மனிதனில் அவர் மாற்றத்தைக் கொண்டு வருவார், சிலவற்றை மாற்றியமைப்பார், பரிசுத்தப் படுத்துவார். நம்முடைய பாரங்களை, சூழ்நிலைகளை, மனிதர்களை, தாலந்துகளை கர்த்தரிடத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

**- தொடரும்**



# இதயங்கள் உருகட்டும்

– சகோ.D. அகஸ்டின் ஜெபக்குமார்




கிறிஸ்தவ ஆராதனைகள் இன்றைக்கு இசைக்கு முக்கியத்துவம் தந்து, ஒரே வார்த்தையினை திரும்பத் திரும்பச் சொல்லி, அதனால் எழுப்பப்படும் உடல் அசைவுகளுக்கும், உணர்ச்சிகளுக்கும் முதலிடம் கொடுக்கப்படும் ஆராதனைகளாக மாறிவருகிறது. கூடவே அநேக தேவ மனிதர்களை நடிகர்களாக சித்தரித்து பலவித பின்னோட்டங்களை அதிகமாக காண்பித்து, வார்த்தைகளை கவனிக்காதவாறு திசைதிருப்பச் செய்துவிட்ட கொடுமையான காலமிது. மாறாக, உள்ளத்தினை உடையச்செய்து உள் உணர்வுகளை உண்டாக்கி, உருக்கமாய் உருகிப்பாடச் செய்யும் பழைய பாடல்களின் வார்த்தைகள் இன்னமும் மங்கிப்போகாவண்ணம் தேவனுக்காய் மனிதனை ஆயத்தப்படுத்தும் உன்னத பணியினைச் செய்து வருகிறது.

அவைகள் காலத்தால், கருத்துக்களால் அழிக்கப்படக்கூடாதவைகள். அவைகள் தீர்க்கதரிசனமானவைகளும்கூட. அந்தப் பாடல்களை மீண்டும் மீண்டும் ஞாபகத்திற்குக் கொண்டு வந்து, இதயங்களை துடிக்கச்செய்து, அர்ப்பணிக்கவைத்து பின்னர் உருகச் செய்யும்வண்ணமும், உருவாக்கும்வண்ணமும் இதை வெளியிட்டிருக்கிறார்கள். இதை வாங்கிக் கேளுங்கள்.

கிடைக்குமிடம்:

**ஜெம்ஸ்,**

எண் 11, 13-வது குறுக்குத் தெரு, நியு காலனி, குரோம்பேட்டை,

சென்னை-600 044, தமிழ்நாடு, தென் இந்தியா.

தொலைபேசி: 044-22386031, 22380295

(இந்த பாடல் வரிகள் உண்மையிலேயே நம் இதயத்தை உருக்குவதாகவே உள்ளது. முக்கியமாக இதன் இசையை குறிப்பிட்டே ஆகவேண்டும். மிக ஜாக்கிரதையாக அதே நேரத்தில் இயல்பாக இசையமைத்துள்ளார் சகோதரர். **ஆல்வின்.** ஆர்ப்பாட்டமில்லாத, அமைதியான இசை நம்மை மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டுகிறது. இசையையும், இசை கருவிகளையும் இந்த 24 வயது இளைஞர் கையாண்டுள்ளவிதம் மிகவும் ரசிக்கும்படியாக உள்ளது. இந்த பாடல் வரிகள், கர்த்தரின் சிந்தையையும், இருதயத்தையும் வெளிப்படுத்துவதாக உள்ளது. நம்மை, கர்த்தரை நோக்கி பார்க்க வைக்கின்றது. நல்ல குரல்வளத்தைவிட, இயேசுவின் அன்பாகிய அபிஷேகமுள்ள குரலே சரியானது என்பதையும் இந்தப் பாடல்களைக் கேட்கும்பொழுது நாம் புரிந்துகொள்ள முடிகிறது. எல்லா வயதினரும், விசேஷமாக வாலிபர்கள் இதை கேட்பது அவர்களுக்கு மிக பிரயோஜனமாக இருக்கும்.)






இந்திய மிஷனெரி ஊழியத்தில், இந்தியரின் வாழ்க்கை சரிதங்கள் அதிகம் சொல்லப்படாமல், வெளிநாட்டு ஊழியர்களின் தியாகமும் ஊழியமும் மிகவும் மேன்மைப்படுத்திச் சொல்லப்பட்டதினால், அநேக இளைஞர்களுக்கு உந்தும் சக்தியினை உண்டாக்கவும், நம்மாலும் கூடும் என்ற விசுவாசத்தினை உருவாக்கவும், இந்திய மிஷனெரிகளின் வாழ்க்கை இன்றியமையாதது என்பதனையும்

தேவனுக்கும் மனிதருக்கும் முன்பாக, திறந்த புத்தகமாக வாழும் வாழ்வு எப்பொழுதும் பிரதிபலனை அளிக்கக்கூடியது என்பதனையும்,

உண்மையாய், எளிமையாய், தியாகமாய், பூரண மனதோடு கூடிய சேவை செய்தால் தேசம் தேவனை அறிந்து, உள்ளங்கள் உருமாறி உபயோகப்படும் என்பதனையும்,

பிரதிஷ்டைகள் நொறுங்கிப் போகாவண்ணம் இறுதிவரைத் காத்துக் கொண்டால், உடன்படிக்கை செய்தவர் அதனை நிறைவேற்றும் வண்ணம் செயல்படுவதனை நாம் காணமுடியும் என்பதனைக் கூறவே... இந்தப் புத்தகம்.

(கர்த்தர், தமது ஊழியத்திற்கென்று ஒரு மனிதனை எப்படி தெரிந்தெடுக்கிறார் என்பதனையும், அந்த மனிதனை எப்படி உருவாக்குகிறார் என்பதனையும், எப்படிப்பட்ட பாதையில் நடத்துவார் என்பதனையும் அறிந்து கொள்ள இந்த புத்தகம் நமக்கு பேருதவியாக இருக்கும். சகோதரர். அகஸ்டின் ஜெபக்குமார் அவர்களின் பிறப்பிலிருந்து இன்று பீகாரில் அவர் செய்கின்ற ஊழியம்வரை எல்லா விவரங்களும் இந்த புத்தகத்தில் உள்ளது. இதை படித்து உங்களுடைய குடும்பத்திற்கும், ஊழியத்திற்கும் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்.)

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| **உள்நாட்டு வருட சந்தா** | ரூ. | 200/- |
| **வெளிநாட்டு வருட சந்தா** | ரூ. | 2000/- |

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

ICICI **வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா



ஜெப தேவைக்கும்,
தேவ ஆலோசனைக்கும்

+ 91 - 44 - 22353500
+ 91 - 9940667881
www.kennedyministries.org
E-mail: nijakennedy@yahoo.com